MAY 2024

U/ID 33226/ UCT6B/UCL6B

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை எழுதுக.

1. சிலப்பதிகாரம் சமணக்காப்பியம் என்பதற்குரிய நிகழ்வுகளில் இரண்டினைச் சுட்டுக.

2. சீத்தலைச்சாத்தனார் குறித்தெழுதுக.

3. சீவகன் குறித்து எழுதுக.

4. குபேரதத்தன் யார்?

5. பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாக அமையக் காரணம் என்ன?

6. சேதி நாடு குறித்து எழுதுக.

7. கம்பர் வாழ்வியற்குறிப்பு தருக.

8. வில்லிபாரதம் நூற்குறிப்பு தருக.

9. துரியோதனன் குறிப்பு வரைக.

10. தேம்பாவணி நூற்குறிப்பு தருக.

11. உமறுப்புலவர் வாழ்வியற் குறிப்பு தருக.

12. இரட்டைக் காப்பியங்கள் எவை? ஏன்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை எழுதுக.

13. மனையறம் படுத்த காதையின் சிறப்பை எழுதுக.

14. அறவனார் கூறிய சுதமதியின் முற்பிறப்பு வரலாற்றை எழுதுக.

15. சுரமஞ்சரியைத் தான் மாற்றுவேன் என்ற சீவகனின் செயல்களை எழுதுக.

16. முத்தநாதன் செய்த சூழ்ச்சிகள் யாவை?

17. உருக்காட்டுப் படலத்தில் சீதையின் புலம்பல்கள் யாவை?

18. அருச்சுனன் கிருஷ்ணரைப் போற்றிய தன்மையை விளக்குக.

19. மானுக்குப் பிணை நின்ற நபிகளின் செயல்களை எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் 500 சொற்களில் விடை எழுதுக.

20. புகார்க்காண்ட நிகழ்வுகளைப் புலப்படுத்துக.

21. சீவகனைக்கண்டு மயங்கிய சுரமஞ்சரியின் நிலையை எழுதுக.

22. அனுமன் கூறியதைக்கேட்ட சீதையின் மறுமொழிகள் யாவை?

23. வீட்டுமப்பருவத்தில் இடம்பெறும் போர் நிகழ்வுகள் யாவை?

24. வளன் சனித்த நிகழ்வைக் கட்டுரைக்க.

———————